**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

31.7.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 23.7.2011 முதல் 31.7.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**23-7-2011 முதல் 31-7-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 26 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 2 |
| 5. | வகுப்பறை வன்முறை | 3 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 6 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 3 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | 1 |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 14 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 1 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 1 |
| 17. | மணல் கொள்ளை | 4 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |

| | | |
|---|---|---|
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 2 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 5 |
| | மொத்தம் | 72 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்



(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-29
## 23.7.2011 முதல் 31.7.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1902. | 23.7.2011 | **கடலூர் மாவட்டம்:** சேத்தியாதோப்பு மாரியம்மன்கோயில் தெருவைச் சேர்ந்த மனோகரன்(38). மனோகரன் தனக்குச் சொந்தமான நிலத்தில் கட்டிடம் கட்டினார். அதே பகுதியைச் சேர்ந்த சிலர் கட்டிடம் கட்டுவதைத் தடுத்துள்ளனர். இதுகுறித்து சேத்தியாதோப்பு இன்ஸ்பெக்டர் பிரபாகரனை அணுகினார். அவர் ரூபாய் 10 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக மனோகரன் புகார். | லஞ்சம் | தமிழ்சுடர் |
| 1903. | 23.7.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி கல்லணை அருகேயுள்ள குத்தாபுரத்தைச் சேர்ந்த சத்யா(16). உறவினரான முருகானந்தம் என்பவருக்கு பெற்றோர் மற்றும் உறவினர்கள் கட்டாய திருமணம் செய்ய முயன்ற போது அதிகாரிகள் திருமணம் நிறுத்தம். | குழந்தைத் திருமணம் | தினமலர் |
| 1904. | 23.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி, நேரு நகரில் வசிப்பவர் ராஜமாணிக்கம். டாக்டர் அம்பேத்கார் திருகுலப்பேரவையில் பொதுச்செயலாளராகவும் உள்ளார். அதிகாலை 1.40 மணிக்கு இவரது வீட்டின் மேல் பெட்ரோல் குண்டு வீசியதாக புகர். | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |
| 1905. | 23.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சாலூரில் அரசு உயர்நிலைப்பள்ளியில் மதிய உணவு சாப்பிட்ட மாணவி, மாணவிகளுக்கு வாந்தி மயக்கம். | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 1906. | 23.7.2011 | **தேனி மாவட்டம்:** அரப்படிதேவன்பட்டியைச் சேர்ந்த செல்லம், மகன் அருண்பிரகாஷ்(14). தனது மகனைக் காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 1907. | 23.7.2011 | **திருச்சி மாவட்டம்:** உப்பிலியபுரத்தை அடுத்த கத்தம்பூர்பட்டையன் கோவில் பகுதியைச் சேர்ந்த வள்ளியம்மை(30) அதே பகுதியைச் சேர்ந்த வெள்ளையன்(60) வள்ளியம்மாளை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. ஆத்திரமடைந்த வள்ளியம்மளை வெள்ளையனை கொலை செய்தார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1908. | 24.7.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ஆர்.எஸ்.மங்கலம் இந்திராநகரைச் சேர்ந்த அமுதா(28). அதே பகுதியைச் சேர்ந்த | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சாதிக்(28) இருவரும் காதலித்துத்தனர். திருமணம் செய்துக்கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல். இந்நிலையில் சாதிக் திருமணம் செய்ய மறுப்பதாக அமுதா புகார். | | |
| 1909. | 24.7.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்தூர்அருகே உள்ள புங்கம்பாடி ஆதிதிராவிடர் காலனியைச் சேர்ந்த ஈஸ்வரி(45) அதே பகுதியைச் சேர்ந்த செல்வராஜ்(47). இருவருக்கும் கள்ளத் தொடர்பு. குடிபோதையில் ஈஸ்வரியின் வீட்டிற்கு வந்த செல்வராஜ் இருவருக்கும் நடந்த தகராறில் ஆத்திரமடைந்த செல்வராஜ் ஈஸ்வரி மீது கல்லைபோட்டுக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 1910. | 24.7.2011 | **வேலூர் மாவட்டம்:** னைனியப்பன் தெருவைச் சேர்ந்த வெங்கடேஷ்(47) தாய் பூசணம்மாள்(70). வெங்கடேஷ் குடிபோதையில் அடிக்கடி தகராறு செய்ததால் கூலிப்படை மூலம் வெங்கடேசை கொலை செய்ததாக பூசணம்மாள் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 1911. | 24.7.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வேங்கிக்கால் தென்றல் நகரைச் சேர்ந்த அரவிந்தன் மனைவி தனலெட்சுமி. இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். தனக்கு சேர வேண்டிய பத்துகோடி ரூபாய் மதிப்பிலான தனது சொத்தை அதிமுக நகர செயலாளர் வி.கனகராஜ் மோசடி செய்ததாக கனகராஜ் மீது தனலட்சுமி புகார். | மோசடி & பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1912. | 24.7.2011 | **மதுரை மாவட்டம்:** தேனூர் வைகை ஆற்றுப்பகுதியில் அனுமதியின்றி மணல் கடத்திய மினிவேன் பறிமுதல். டிரைவர் தனசேகரபாண்டியன்(26) கைது. | மணல் கொள்ளை | தினகரன் |
| 1913. | 24.7.2011 | **திருப்பூர் மாவட்டம்:** வெள்ளக்கோயில் தீத்தாம்பாளையத்தில் தலித் மக்கள் கட்டி வழிபடும் கோயிலை ஆதிக்கச்சாதியினர் அடித்து சேதப்படுத்தியதாக ஆதிக்கச்சாதியினர் மீது தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1914. | 24.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** அரசனூர் கிராமத்தில் 100 நாள் வேலைத்திட்டத்தில் பல லட்சம் மோசடி செய்ததாகவும் குறைந்த கூலி வழங்கி மோசடி செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகை. | மோசடி | தீக்கதிர் |
| 1915. | 25.7.2011 | **மதுரை மாவட்டம்:** சத்தியமூர்த்திநகர் 5–வது தெருவைச் சேர்ந்த சுரேஷ் மனைவி | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கலாராணி (33). குடிகாரக் கணவனால் மனம் விரக்தியடைந்த கலாராணி தீக்குளித்துத் தற்கொலை. | & தற்கொலை | |
| 1916. | 25.7.2011 | **மதுரை மாவட்டம்:** ஹார்விபட்டி பேரூராட்சி 1வது வார்டு இந்திரா நகரில் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான இடத்தில் 50 ஆண்டுகளாக 25 குடும்பங்கள் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, மின் இணைப்பு ஏதுமின்றி வாழ்ந்து வருவதாகவும், தங்களது இடத்தை தனியார் நிறுவனம் ஆக்கிரமித்ததாக பாதிக்கப்பட்ட மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினமணி |
| 1917. | 25.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை கல்லுப்பட்டியார் வீதியைச் சேர்ந்த முத்துராமன் மகள் லட்சுமி (16). முத்துராமனின் தம்பி கோட்டைப்பாண்டினன் லட்சுமியை பாலியல் பலாத்காரம். லட்சுமி கர்ப்பம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1918. | 25.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** அம்பலத்தடி கண்மாய் கரையில் அனுமதியின்றி மணல் அள்ளிய 7 டிப்பர் லாரிகள், 2 டிராக்டர்கள், பறிமுதல். | மணல் கொள்ளை | தினமலர் |
| 1919. | 25.7.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் பெரியரத வீதியில் உள்ள ஒரு கட்டிடம் மற்றும் கோட்டை தெருவில் உள்ள பொதுச்சாவடியிலுமாக திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளிக்கூடம் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் திறந்த வெளியில் சுகாதாரக்கேட்டுடன் சத்துணவுக்கூடம் செயல்படுவதால், மாணவிகள் அவதி. | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 1920. | 25.7.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செங்கம் அருகே உள்ள எறையூர் கிராமத்தைச் சேர்ந்த சேக்கவுஸ் மகள் யாஸ்மின்(18). கல்லூரி சென்ற யாஸ்மின் பண்டிதப்பட்டு கிராமத்தில் பள்ளிக்கூடம் அருகே உள்ள கிணற்றில் பிணமாக கிடந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1921. | 25.7.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு பேரூராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள், குசிக்கல்மேடு என்ற இடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. துப்புரவுத் தொழிலாளியான முரளி(30) முருகேசன்(43) இருவரும் சுத்தம் செய்யும் போது குப்பையில் திடீரென தீப்பற்றியதில் முருகேசன் மரணம். | தலித்துகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1922. | 26.7.2011 | **தேனி மாவட்டம்:** கம்பம்மெட்டு, | ரேசன் அரிசி, | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குமுளிமெட்டு, போடிமெட்டு பகுதிகளில் காவலர்கள் வாகன சோதனையில் போது 13 மெட்ரிக் டன் அரிசியும், 2 ஆயிரத்து 580 லிட்டர் மண்ணெண்ணெயும் பறிமுதல். | மண்ணெண்ணெய் கடத்தல் | |
| 1923. | 26.7.2011 | **பெரம்பலூர் மாவட்டம்:** லாடபுரத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் மகள் சவுமியா(19) தமிழக பெண் காவலராக பணிபுரிகிறார். கர்ப்பம் அடைந்து பெண் குழந்தைக்கு தாயான நிலையில் இதற்கு காரணமானவர்களை காட்டிக் கொடுக்க விரும்பாத சவுமியா குழந்தையுடன் கிணற்றில் குதித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 1924. | 26.7.2011 | **நெல்லை மாவட்டம்:** களக்காடு அருகே பச்சையாற்றில் அனுமதியின்றி மணல் கடத்திய மணல் சன்னியாசி(27), கிட்டு(52), முருகன்(58) கைது. | மணல் கொள்ளை | தமிழ்சுடர் |
| 1925. | 26.7.2011 | **திருப்பூர் மாவட்டம்:** பல்லடம் அருகே உள்ள சின்னக்கரை பகுதியைச் சேர்ந்தவர் செந்தில்குமார் மனைவி ஜெயா. கணவன் மனைவிக் குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த செந்தில்குமார் சுத்தியால் தாக்கியதால் காயமடைந்த ஜெயா மருத்துவமனையில் சிகிச்சை. புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1926. | 26.7.2011 | **மதுரை மாவட்டம்:** சத்திரப்பட்டி அருகே எம். சத்திரப்பட்டியைச் சேர்ந்த மச்சந்திரன் மனைவி மருதாயி(58). இருசக்கர வாகத்தில் வந்த 2 மர்ம நபர்கள் மருதாயியை தாக்கி நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1927. | 26.7.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** முதுகுளத்தூர் மகிண்டி ஊராட்சிக்குட்பட்ட சூரங்குளத்தைச் சேர்ந்த பாண்டியன் மகளை அப்பகுதியைச் சேர்ந்த பாலதண்டாயுதபாணி பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாகப் புகார். புகாரை வாபஸ் வாங்க மறுத்த பாண்டியன் மற்றும் 9 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை அதே பகுதியைச் சேர்ந்த பூபதி மற்றும் மணி ஊரைவிட்டு ஒதுக்கிவைத்ததாக புகார். | கட்டப்பஞ்சாயத்து & சமூகப்புறக்கணிப்பு | தினமலர் |
| 1928. | 26.7.2011 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி ஒன்றியம் சொக்கலிங்கபுரத்தைச் சேர்ந்த சசிகுமார் மனைவி மணிமேகலை(28). அதே பகுதியைச் சேர்ந்த கங்காதரன்(22) மணிமேகலையை கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 1929. | 26.7.2011 | **கரூர் மாவட்டம்:** கடவூர் அடுத்த செங்குளத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி 1,450 மாணவ, மாணவியர் படித்து | வகுப்பறை வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருகின்றனர். இப்பள்ளியில் ஆசியர்கள் பள்ளிக்கு தாமதமாக வருவதோடு பள்ளியில் அடிப்படை வசதிகள் இல்லை என மாணவ, மாணவிகள் புகார். | | |
| 1930. | 26.7.2011 | **கோவை மாவட்டம்:** சிங்காநல்லூர் காலனியைச் சேர்ந்த அன்னக்கிளி(40) கடந்த ஒரு மாதகாலமாக தனது கணவரை காணவில்லை என புகார். காவல்துறை நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து கலெக்டரிடம் மனு கொடுக்க வந்த அன்னக்கிளி விஷம் குடித்தார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1931. | 26.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி குமாரக்குறிச்சியைச் சேர்ந்த ஏ.பைரோஸ் பீவி. தனது நிலத்தை அதே பகுதியைச் சேர்ந்த அதிமுக செயலாளர் அழகுசுந்தரம் அபகரித்தாக ஏ.பைரோஸ் பீவி புகார். | நில மோசடி & பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1932. | 26.7.2011 | **மதுரை மாவட்டம்:** விருதுநகர் மாவட்டம் தளவாய்புரம் கிருஷ்ணன் கோயில் தெருவைச் சேர்ந்த பிச்சைகதிர்(32). கெலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டு மதுரை சிறையிடைக்கப்பட்ட பிச்சைக்கதிர் சிறையில் தற்கொலைக்கு முயன்றதாகப் புகார். | சிறைக் கைதி தற்கொலை முயற்சி | தினகரன் |
| 1933. | 26.7.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்தூர் அருகே சிக்ராம்பட்டியைச் சேர்ந்த கோபலாகிருஷ்ணன் மனைவி மல்லிகா(30). மகள் காளீஸ்வரி. கணவனின் குடிப்பழக்கத்தால் மனமுடைந்த மல்லிகா தனது மகளுடன் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 1934. | 27.7.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** வகைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சிவசாமி மகள் பாண்டிச்செல்வி(17). வேலைக்குச் செல்லும் போது உடன்வேலை செய்த கலைச்செல்வியுடன் பழக்கம் ஏற்பட்டது. சிறுமிக்கு பணம் ஆசை காட்டி பாலியல் வன்முறையில் ஈடுபடுத்தியதாக கலைச்செல்வி மீது பாண்டிச்செல்வி புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |
| 1935. | 27.7.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி, ஆசாத்நகர், முதல் தெருவைச் சேர்ந்த, குழந்தை சோழகர். சோழகருக்குச் சொந்தமான 50 கோடி ரூபாய் மதிப்பிலான நிலத்தை திருச்சி துணை மேயர் அன்பழகன், அபகரித்ததாக சோழகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என புகார். அன்பழகன் மற்றும் காவலர்கள் மிரட்டுவதாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை & நில அபகரிப்பு | தினமலர் |
| 1936. | 27.7.2011 | **தேனி மாவட்டம்:** சின்னமனூர்அருகே | பெண்கள் மீதான | தினகரன் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சீப்பாலக்கோட்டையைச் சேர்ந்த ஜோதிகண்ணன்(35) மனைவி புஷ்பா(28). புஷ்பா தனது கர்ப்பத்தைக் கலைக்க காமாட்சிபுரத்தில் உள்ள மருத்துவர் ராஜேந்திரனை அணுகினார். மருத்துவரின் தவறான சிகிச்சையால் புஷ்பா பாதிக்கப்பட்டதாக புகார். ராஜேந்தரன் கைது. | வன்முறை | |
| 1937. | 27.7.2011 | **கோவை மாவட்டம்:** மதுக்கரை அருகே உள்ள பிச்சானூரைச் சேர்ந்த செல்வம்(40) மனைவி மல்லிகா. செல்வம் நிதி நிறுவனம் ஒன்றில் கடன் வாங்கினார். அதை கட்டவில்லை என நிறுவனத்தார் வீட்டிற்கு வந்து மிரட்டியதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும். காவலர்கள் நடவடிக்கை எடுக்காததால் மனமுடைந்த செல்வம் மற்றும் குடும்பத்தார் கோவை கலெக்டர் அலுவகத்தில் தீக்குளிக்க முயற்சி. | கந்துவட்டி | தினகரன் |
| 1938. | 28.7.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் கோர்ட்டில் நேற்று வீரபாண்டி ஆறுமுகம், ஆஜர்படுத்தப்பட்டபோது, போலீசார் பாதுகாப்புப்பணியை, கோட்டை விட்டனர். கோர்ட் வளாகத்தில் தள்ளுமுள்ளு. நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் மீது தி.மு.க, தொண்டர்கள் தாக்குதல். | பத்திரிக்கையாளர்கள் மீது தாக்குதல் | தினமலர் |
| 1939. | 28.7.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் காமராஜர்புரம் சினிவாசன் மகன் நவீன்பாபு(10) தனியார் பள்ளியில் 5–ம் வகுப்புப் படிக்கும் மாணவன். பள்ளிக்குச் சென்ற நவீன்பாபுவைக் காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 1940. | 28.7.2011 | **நாமக்கல் மாவட்டம்:** திருச்செங்கோட்டில் போர்வெல் இயந்திரங்களுக்குத் தேவையான உதிரி பாகங்களை மொத்தமாக வாங்கி விற்பனை செய்யும் ஜெபி ஹைட்ராலிக் நிறுவனம். இதன் உரிமையாளர் பரணி திருச்செங்கோடு கிளை அலுவலகத்திற்கு சி.பார்ம் படிவம் வாங்க சென்றுள்ளார். வணிக வரித்துறை அலுவலர் ராமசாமி ரூ.20 ஆயிரம் லஞ்சம் கேட்டதாகப் புகார். | லஞ்சம் | தீக்கதிர் |
| 1941. | 28.7.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் ஏழுமலை பாலிடெக்னிக்கல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துவரும் மாணவன் டி. பிரபாகரன். வகுப்பாசிரியர் குணசேகரன் பிரபாகரனை வகுப்பறையில் மற்ற மாணவர்கள் முன்னிலையில் அடித்ததால் மாணவன் மரணம். மற்ற மாணவர்கள் போராட்டம். | மாணவர்கள் வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1942. | 28.7.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் பூம்பாறையில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த முருகன், மாயக்காள். ஆதிக்க சாதியைச் சேர்ந்த சுப்ரமணியும் அவரது நண்பர்களும் சேர்ந்து குடிநீரில் மலத்தை போட்டும், தகாத வார்த்தைகளால் பேசியும் சித்திரவதை. | தலித்துகள் மீதான வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 1943. | 28.7.2011 | **சென்னை மாவட்டம்:** சூளைமேடு ஸ்ரீராமபுரம் முதல் தெருவைச் சேர்ந்த ஆரோக்கியராஜ் மனைவி சகாயராணி(46). இவ்வீட்டில் பில்லி, சூனியம், இருப்பதாக கூறி மர்ம நபர் 48 பவுன் நகை, மற்றும் ரூபாய் 37 லட்சம் மோசடி. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1944. | 28.7.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரிக்கு வெளியூரில் இருந்துவந்த 3 இளைஞர்கள் உல்லாச அழகிகள் போன் நம்பர் என நினைத்து எஸ்.ஐ., மனைவிக்கு ஆபாசமாக பேசியதாக 3 நபர்கள் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1945. | 28.7.2011 | **நெல்லை மாவட்டம்:** கல்லிடைகுறிச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியன். நெல்வியாபாரத்தில் தனக்கும் அதே பகுதியைச் சேர்ந்த பாலசந்திரன் இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் பொய் வழக்கில் காவலர்கள் தன்னைக் கைது செய்ததாகவும், வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கியதாகவும் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1946. | 29.7.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் சந்திராபாளையத்தைச் சேர்ந்த அறிவொளி மகள் சத்தியபிரபா திருநகரில் உள்ள பள்ளியில் 10 வகுப்பு படிக்கும் மாணவி. அதே பள்ளியில் பணிபுரியும் கராத்த மாஸ்டர் சுதாகர்(29) சத்தியபிரபாவை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம். புகார். சுதாகர் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 1947. | 29.7.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடியைச் சேர்ந்த காமாட்சி மகள் மனோன்மணி(16) இவர் காரைக்குடி பாலிடெக்னிக் படிக்கிறார். சிங்கம்புணிரியைச் சேர்ந்த கருப்பையா(30) மனோன்மணியைக் கடத்திச் சென்றதாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |
| 1948. | 29.7.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ரேஸ்கோர்ஸ் காலனி பகுதியைச் சேர்ந்த ராம்கணேஷ்(35) மனைவி புஷ்பா(31). மனைவியை அடித்துக் துன்புறுத்தியதாக ராம்கணேஷ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1949. | 29.7.2011 | **ஈரோடு மாவட்டம்:** சென்னிமலை பாரதி | பெண்கள் மீதான | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நகரைச் சேர்ந்த தங்கமுத்து மனைவி லோகநாயகி(55) வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்தார். அதே பகுதியைச் சேர்ந்த சதீஷ்குமார் லோகநாயகியிடம் பணம் கடன் வாங்கினார். கடனுக்கு மேல் அதிக வட்டிக் கேட்டதால் ஆத்திரமடைந்த சதீஷ்குமார், கல்லூரி மாணவர்கள் ராஜேஷ்குமார்(21), நம்பிராஜன்(23) மூவரும் சேர்ந்து லோகநாயகியைக் கொலை செய்ததாகப் புகார். | வன்முறை & கொலை | |
| 1950. | 29.7.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை முத்தாலம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த ராஜநாகம் மகள் கவுசல்யா(27). வேலைக்குச் சென்ற கவுசல்யாவை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 1951. | 29.7.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் பாம்பன் நகரைச் சேர்ந்த பழனிமுத்து மனைவி காமாட்சி(24). வேலைக்குச் சென்ற காமாட்சியைக் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 1952. | 29.7.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** செஞ்சி தாலுகா வரிக்கல் கிராமத்தைச் சேர்ந்த பாண்டுரங்கன் மகள் நீலாவதி(19). அதே பகுதியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மற்றும் அவரது உறவினர்கள் கடத்திச் சென்றதாக பாண்டுரங்கன் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 1953. | 29.7.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை நகர் பகுதியில் தொழிலாளர்துறை அதிகாரிகள் நடத்திய ஆய்வில் பல இடங்களில் பணிபுரிந்து வந்த 14 வயதுக்கு குறைவான 12 குழந்தை தொழிலாளர்கள் மீட்பு. | குழந்தைத் தொழிலாளர் மீட்பு | தினமலர் |
| 1954. | 29.7.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி புதுப்பட்டியைச் சேர்ந்த பொன்பாண்டி(30). சாலை பணியாளராக பணிபுரிந்தார். மேலதிகாரிகளுடன் ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த பொன்பாண்டி பணியின்போது விஷம் குடித்துத் தற்கொலை. | தற்கொலை | தினகரன் |
| 1955. | 29.7.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வாடிப்பட்டி அரகே வடுகபட்டியைச் சேர்ந்த நாகராஜன் மகள் சுகன்யா(27). வேலைக்குச் சென்ற சுகன்யாவைக் காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 1956. | 29.7.2011 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி தாலுகா கண்டமனூர் அருகேயுள்ள ராஜேந்திரா நகரைச் சேர்ந்த அதிமுக பஞ்சாயத்து தலைவர் கொத்தாளமுத்து(50). தனது சொத்துக்கு சான்றிதழ் வாங்க தாசில்தார் | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாகராஜை அணுகினார் அவர் ரூபாய் 5 ஆயிரம் லஞ்சமாக கேட்டதாகப் புகார். நராஜராஜ் கைது. | | |
| 1957. | 29.7.2011 | **இராநாதபுரம் மாவட்டம்:** தனுஷ்கோடி மற்றும் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கியதில் 4 மீனவர்கள் காயம். | மீனவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1958. | 30.7.2011 | **மதுரை மாவட்டம்:** உத்தங்குடி பாண்டிகோயில் தெருவைச் சேர்ந்த பாக்கியநாதன் மனைவி செல்வராணி(35) மகன் சரவணபாண்டி(8). இருவரையும் அதே பகுதியைச் சேர்ந்த சிவா கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் & குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 1959. | 30.7.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகேயுள்ள வி.பெரியகுளத்தைச் சேர்ந்த கல்லுமலை மகள் ஜானகி(21). அலங்காநல்லூர் அருகேயுள்ள சரந்தாங்கியைச் சேர்ந்த பஞ்சாப்(31) ஜானகியை மானபங்கப்படுத்த முயன்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1960. | 30.7.2011 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரத்தைச் சேர்ந்த மாரியப்பன் மகள் நதியா(15). கீரைத்துரையில் தனியார் பள்ளியில் ப்ளஸ் 1 படித்து வந்தார். பள்ளிக்குச் சென்ற நதியாவை அதே பகுதியைச் சேர்ந்த முத்துராக்கு கடத்திச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 1961. | 30.7.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையில் தனியாக நடந்துச் செல்லும் பெண்களைக் குறிவைத்து தாக்கி அவர்களது நகைகளை பறித்துச் வந்த மதுரை சோலையழகுபுரம் ஜவஹர் 4 வது தெரு சுப்பிரமணின்பிள்ளை காம்பவுண்டில் வசித்து வந்த சக்திவேல்(20) கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 1962. | 30.7.2011 | **மதுரை மாவட்டம்:** கூடலழகர்கோவில் அருகே நம்பி பிள்ளயை சீனிவாச பெருமாள் கோயிலை ஒட்டி ராமசந்திரன் என்பவர் ஹோட்டல் கட்டி வந்தார். கோயில் நிலத்தை ஆக்கிரமித்து ராமசந்திரன் ஹோட்டல் கட்டுவதாக டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ் புகைப்படக்காரர் அந்தோணி சேவியர் மற்றும் சிஐடியூ சுமைதுக்கும் சங்க நிர்வாகி சிற்றம்பலம் இருவரும் அப்பகுதியை புகைப்படம் எடுத்துள்ளார். இருவரையும் ராமச்சந்திரன் மற்றும் அவரது ஆட்கள் தாக்கியதாக புகார். | நாளிதழ் புகைப்படக்காரர் மீது தாக்குதல் | தினமணி |
| 1963. | 30.7.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** | மணல் கொள்ளை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திருப்புல்லாணி ஒன்றியம் கிழமான்குண்டு ஊராட்சிக்குட்பட்ட சண்முகவேல்பட்டினம் கிராமத்தில் கடற்கரையோரம் அனுமதியின்றி மணல் அள்ளிய டிராக்டர் பறிமுதல். டிரைவர் கணேசன்(24) கைது. | | |
| 1964. | 30.7.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே உள்ள அயன்குருவித்துறையைச் சேர்ந்த மணி மகள் அபிராமி(17). அருகில் உள்ள பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்தார். அதே பகுதியைச் சேர்ந்த கோபி, கண்ணன் இருவரும் தொடர்ந்து ஈவ்டீசிங் செய்ததால் மனமுடைந்த அபிராமி விஷம் குடித்ததோடு, தூக்குப்போட்டுத் தற்கொலை. | ஈவ்டீசிங் & தற்கொலை | தினத்தந்தி |
| 1965. | 30.7.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் சாத்தூர் தாலுகா, நல்லமநாயக்கன்பட்டியைச் சேர்ந்த பால்சாமி(81) மகள் ரேணுகா. தனது நிலத்தை தனக்கு தெரியாமல் ரேணுகா வேறொருவருக்கு விற்று தன்னை ஏமாற்றியதாக பால்சாமி புகார். | முதியவர்கள் மீதான வன்முறை & நிலமோசடி | தினத்தந்தி |
| 1966. | 31.7.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் அருகே பொம்மண்டபள்ளியில் தனியார் தொழிற்சாலையில் கட்டுமான பணியில் ஈடுபட்ட 18 சிறுவர்கள் மீட்பு. | குழந்தைள் மீதான வன்முறை & கொத்தடிமை | தீக்கதிர் |
| 1967. | 31.7.2011 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடியைச் சேர்ந்த சிவா மகள் அம்மு(16). மேலும் படிக்க விரும்பிய அம்முக்கு பெற்றோர் திருமண ஏற்பாடு செய்ததால் மனமுடைந்த அம்மு தீக்குளித்துத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தீக்கதிர் |
| 1968. | 31.7.2011 | **விருதுநகர் மாவட்டம்:** திருத்தங்கல்லில் உள்ள கண்ணகி காலனியைச் சேர்ந்த பாலமுருகன் உட்பட 4 சிறுவர்களை அதே பகுதியைச் சேர்ந்த பத்மாநாபன் கேரளமாநிலம் கண்ணூர் மாவட்டத்தில் உள்ள தனது கம்பெனிக்கு வேலைக்கு அழைத்துச் சென்று துன்புறுத்தியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை & குழந்தைள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1969. | 31.7.2011 | **கோவை மாவட்டம்:** விருதுநகர் வத்திராயிருப்பு பகுதியைச் சேர்ந்த கோடாங்கி மகள் கவிதா(14). கோவை கண்ணாம்பாளையத்தில் உள்ள ராஜஸ்ரீ மில்லில் சுமங்கலித் திட்டத்தில் வேலைக்குச் சேர்ந்துள்ளார். சென்று மர்மமான முறையில் மில்லில் இறந்ததாக பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தீக்கதிர் |